உ
சிவமயம்

திருவண்ணமலை

ஸ்ரீ அண்ணமலையார் ஆலயத்தின்

சார்வரி வருட

விசேட நாட் குறிப்பு விபரம்

தரும கருத்தர்கள்.

T. V. சுப்பிரமணிய செட்டியார், சேர்மன்

A. ஆறுமுகம், B. A., மேல்புழுதியூர்

V. இராஜகோவிந்த செட்டியார், வில்வாரணி

R. நாராயணசாமி ரெட்டியார்

P. பழநி பிள்ளை.

C. G. சாமிநாதன்,
எக்ஸிகூடிவ் ஆபிஸர்.

[விலை 13 காசு]

சம்பந்தர்

பூவார் மலர் கொண்டு அடியார் தொழுவார் புகழ்வார் வானோர்கள்
மூவார் புரங்கள் எரித்த அன்று மூவர்க்கு அருள் செய்தார்
தூமா மழைநின்று அதிர வெருவித் தொறுவின் நிரைஓடும்
ஆமாம் பிணைவந்து அணையும் சாரல் அண்ணாமலையாரே.

சுந்தரர்

தேனைக் காவல் கொண்டு விண்ட கொன்றைச் செழுந்தாராய்
வானைக் காவல் கொண்டு நின்றார் அறியா நெறியானே
ஆனைக் காவல் அரனே பரனே அண்ணாமலையானே
ஊனைக் காவல் கைவிட்டு உன்னை உகப்பார் உணர்வாரே.

அப்பர்

பைம்பொனே பவளக்குன்றே பரமனே பால் வெண்ணீற்றாய்
செம்பொனே மலர் செய் பாதா சீர்தரு மணியே மிக்க
அம்பொனே கொழித்து வீழும் அணியணாமலை யுளானே
எம்பொனே உன்னையல்லால் ஏதும் நான் நினைவிலேனே.

மாணிக்கவாசகர்

விண்ணாளும் தேவர்க்கு மேலாய வேதியனை
மண்ணாளும் மன்னவர்க்கு மாண்பாகி நின்றானைத்
தண்ணார் தமிழளிக்கும் தண் பாண்டி நாட்டானைப்
பெண்ணாளும் பாகனைப் பேணு பெருந்துறையில்
கண்ணார் கழல்காட்டி நாயேனை ஆட்கொண்ட
அண்ணாமலை யானைப் பாடுதுங்காண் அம்மானாய்.

91/1

உ
சிவமயம்
ஸ்ரீ அண்ணுமலையார் துணை

திருவண்ணுமலை
ஸ்ரீ உண்ணுமுலை உடன் ஆகிய

ஸ்ரீ அண்ணுமலைப் பெருமான்

ஆலயத்தின் சார்வரி வருடத்திய

விழாக்களின் அறிக்கை

தலச் சிறப்பு

ஸ்ரீமதகண்டாகார நித்த வியாபக ஸச்சிதானந்த ஸ்வரூப சுத்த ஷாட்குண்ய பரிபூரண பரமபதியாகிய சிவபெருமான், தமது தர்மபத்தினியாரும் லோகமாதாவுமாகிய பராசக்தியாரோடியைந்து ஸ்ரீ சாம்பமூர்த்தியாய், ஆன்ம கோடிகள் அதிருசியராகிய தம்மைத் திருசியராகக்கண்டு எளிதிலுபாசித்துப் போக மோக்ஷ வின்பங்களைப் பெற்றுய்ய வேண்டிப் பூலோகத்தில் எண்ணில்லாத புண்ணிய ஸ்தலங்களை வைத்துப் பரிவார தேவதைகள் சூழ ஸ்கந்த கணேசர் ஸஹிதம் அப்பராசக்தியாரோடு கோவில் கொண்டு கொலு வீற்றிருந்தருளுவர்.

அவ் வெண்ணில்லாத புண்ணிய ஸ்தலங்களுள்ளே சிறப்பு வகையால் நோக்குமிடத்து உத்தம ஸ்தலங்கள் அறுபத்தெட்டு; அவற்றுள்ளும் சிறப்புவகையால் நோக்குமிடத்து உத்தமோத்தம ஸ்தலங்கள் நான்கு. அவை திருவாரூர், சிதம்பரம், காசி, திருவண்ணுமலை என்பனவாம், இவற்றுள்ளும் சிறப்புவகையால் நோக்குமிடத்து முந்திய மூன்றும் முயன்று முத்திபெற வேண்டிய ஸ்தலங்களாய் நிற்ப, எங்கிருந்தும் எப்படியிருந்தும் எவர்களும் எம் முயற்சியும் செய்யவேண்டாது தன்னை நினைத்த மாத்திரத் திற்றனே அந்நினைத்தவர்களுக்கு முத்தியளிப்பது திருவண்ணுமலை யாதலால் எத்தலங்களுள்ளும் அத்தியந்த உத்தமோத்தம சிவஸ்தலம் திருவண்ணுமலை யென்பது ஸர்வலோக ஸர்வ சாஸ்திரப் பிரசித்தமாம்.

சிவபெருமான், பிரம்ம விஷ்ணுக்கள் அகங்காரத்தால் அடிமுடி தேடியுங் காணாது திகைத்து நிற்ப, தாம் அகண்ட விலாச அதீத ஜோதிப் பிழம்பாய் நின்று தமது ஸர்வோத்கர்ஷத்தை அநுபவத்தில் விளக்கி நின்ற துர்லப அவசரம் இத்திருவண்ணமலையாம்.

சிவபெருமான், தம்மை மறந்து அகங்கரித்த பிரம்ம விஷ்ணுக்களது அபராதத்தை அவர்களது முக்கரண வழிபாட்டுக்குத் திருவுள மிரங்கி க்ஷமித்து அவர்களுக்குத் தமது யதார்த்த ஸ்வரூப சுத்த ஜோதி தரிசனங் காட்டித் தமது ஸர்வாநுக்கிரககரத்வத்தை அநுபவத்தில் விளக்கி நின்ற சுலப அவசரம் இத திருவண்ணமலையாம்.

சிவபெருமான், மற்றைத் தலங்களிற் போலாது எவர் கண்ணுக்கும் எளிதிற் புலப்படும்படி தமது வடிவம் மலையேயாகக்கொண்டு அதிப்பிரசித்த ஸாந்நித்தியம் பெற்று விளங்கும் கிருபாவசரம் இத்திருவண்ணமலையாம்.

சிவபெருமான், ஜாதி, பிறப்பு, சமயம், ஆசாரம், ஞானம் என்னும் இவற்றால் உயர்ந்தோரும தாழ்ந்தோருமாகிய ஜீவர்களெல்லாம் தம்மைத் தடையின்றித் தூரத்திலும் சமீபத்திலும் ஏகாகாரமாகத் தரிசிக்கும்படி தமது ஸ்தானம் வெளியாகக்கொண்டு விளங்கும் ஸர்வ ஸமரசாவசரம் இத்திருவண்ணமலையாம்.

இங்கு பர்வதமே லிங்காகாரம். சிவலிங்கமாகிய இப்பர்வதமே கிருதயுகத்தில் அக்கினி மலையாயும், திரேதாயுகத்தில் மாணிக்க மலையாயும், துவாபர யுகத்தில் பொன்மலையாயும், கலியுகத்திற் கன்மலையாயும் திருவுருக்காட்டி நிற்கும்.

இதற்குத் தேஜோ நகரம், கௌரி நகரம், சிவலோகம், வாயு நகரம், முத்தி நகரம், ஞான நகரம், ஸ்தலேச்வரம், சுத்த நகரம், தக்ஷிண கைலாசம், சோணசலம் முதலியவாகப் பல நாமங்களுண்டு. ஸாக்ஷாத் கைலாசம் சிவபெருமானுக்கு ஸ்தான மாத்திரமாய் ஒரு பிரகாரமாய் விளங்கும்; சிவபெருமான் அதற்கு ஸ்தானியாகிய அதிபதியாவர். இத்திருவண்ணமலையோ ஸ்தானமாகிய மலையுந் தானாய் ஸ்தானியாய் அதிபதியாகிய சிவமுந் தானாய் இரண்டு பிரகாரமாயும் விளங்கும். இக்காரணத்தால் இதனையும் கைலாசத்தையும் சீர்தூக்கி நோக்கின், அக்கைலாசமும் கொண்டாடும் இத்திருவண்ணமலையினது அதுலமகிமை வெளிப்படையாகத் தோன்றும். இத்திருவண்ணமலை ஊழியினும் அழியாது, "பாதாள மேழினுங்கீழ் சொற்கழிவு பாதமல" ராய்ப் போதார் புனைமுடியும் எல்லாப் பொருண்முடிவேயாய் நின்று விளங்கும் சுத்த சிவமேயாம். இங்கே மூன்று யோசனை தூரம் பார்த்தவிடமெல்லாம் சிவலிங்கங்களாய் உண்மையன்பர்க்கு நக்ஷத்திரங்கள் போல விளங்கித் தோன்றும்.

இத்திருவண்ணுமலையைப் பிரகாரத்தினின்று நோக்குவார்க்கு அது ஒவ்வொரு பாகத்திலே பஞ்ச மூர்த்தமாகவும், விநாயகர், ஸுப்பிரமணியர், அம்பிகை, அண்ணுமலையாரென்னும் நான்கு மூர்த்தமாகவும், பார்வதி, பரமேசுவரர், ஸ்கந்தர் என்னும் திரி மூர்த்தமாகவும், சுவாமி அம்பாள் என்னும் இரண்டு மூர்த்த மாகவும், ஏக மூர்த்தமாகவும், இன்னும் பற்பல அற்புதமாகவுந் தோன்றும்.

இங்கே அம்பிகை, கணேசர், ஸ்கந்தர், வயிரவர், பிரம்மா, விஷ்ணு, இலக்குமி, ஸரஸ்வதி, ஸூரியன், சந்திரன், ஸப்த கன்னிகைகள், அஷ்ட வசுக்கள் முதலியோர் செய்தனவும், முழுகி யனவுமாய், அவரவர் பேரால் வழங்கப் பெறுவனவாய் முன்னூற் றறுபது புண்ணிய தீர்த்தங்கள் உள்ளனவாம். அவற்றுள் திக்குப் பாலகர் எழுவர் பேரால் அவரவர் திக்கில் ஏழு தீர்த்தங்களும், ஈசான திக்கில் அசுவினி தேவர்களால் அசுவினி தீர்த்தமும், இன்னும் கட்க தீர்த்தம், அகஸ்திய தீர்த்தம், வசிட்ட தீர்த்தம், திரு நதி, சோண நதி, புண்ணிய நதி, சேயாறு, சக்கர தீர்த்தம் முதலியனவும், உருத்திரகணிகையர் எழுவர் செய்த பல தடாகங் களும், திருக்கோயிலினுள்ளே பிரம்ம தீர்த்தம், சிவகங்கை என்னும் முக்கிய தீர்த்தங்களும் அடங்குவனவாம். இங்கே உண்மை நோக்குடைய ஞானிகளுக்கு நீர் நிலைகளெல்லாம் சிவ தீர்த்தங்களாம்.

கைலையில் சுவாமியின் திருக்கண் புதைத்த பார்வதி தேவியார், ஸ்ரீ காஞ்சிபுரத்தில் வந்து சிவபூஜை செய்து சிவபெருமானது இடப்பாகம் பெற்றது இத்திருவண்ணுமலையிலாம். இத்திருவண்ணு மலையை நினைந்தும், தரிசித்தும், வலம் வந்தும், பூஜித்தும், இங்கு வசித்தும், ஸ்நானஞ் செய்தும், தவமிருந்தும், பணி செய்தும் பேறு பெற்ருேர்கள்-பார்வதி, கணேசர், ஸ்கந்தர், விஷ்ணு, பிரம்மா, இலக்குமி, ஸரஸ்வதி, இந்திரன், திக்குப் பாலகர், வசுக்கள், இருடி கள், முனிவர்கள், ஸூரியன், சந்திரன், வச்சிராங்கத பாண்டியன், பிரதத்தன், வல்லாளன், குதிரை, நாவி, விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, புல் பூண்டு முதலிய பலராவர். தேவர்களும் பிறப்ப துண்டெனில், அப்பிறவி புல்லாயினும் இத்திருவண்ணுமலைப் பூமியிற் பிறக்க இச்சிப்பார்களெனில் இதன் பெருமை சொல்ல வற்ருே! இத்திருவண்ணுமலைக் காற்று வீசும் எத்தனையோ காத தூரம் வரையில் அக்காற்றுப் பரிசிக்கப் பெற்றவர்களுக்குச் சிவ ஞானம் எளிதிற் கைகூடுமென்று பெரியோர்கள் சொல்வார்கள்; சாஸ்திரங்களும் அவ்விதமே முறையிடுகின்றன.

இத்திருவண்ணுமலையை வலம் வருவோர், ஸகல பாவங்களி னின்றும் நீங்கி மனோரத ஸித்திகளெல்லாம் பெற்று முடிவில் முத்தி யின்பமும் பெறுவார்கள். சரியாவான்கள் ஸகள ஜோதி

லிங்கமாகக் கண்டும், கிரியாவான்கள் ஸகள நிஷ்கள ஜோதிலிங்கமாகக் கண்டும், யோகிகள் நிஷ்கள ஜோதிலிங்கமாகக் கண்டு யோக ஸமாதியிற் றூங்காமற் றூங்கிக்கொண்டும், ஞானிகள் அகண்ட விலாஸ சுத்த சத்திய ஞானனந்த ஜோதிலிங்கமாகக் கண்டு ஞான ஸமாதியிற் றூங்காமற் றூங்கிக்கொண்டும் திருவண்ணுமலை என்னும் இந்த ஞான கிரியைப் பிரதக்ஷிணஞ் செய்வார்கள், ஏனைய லோகர்களும் தத்தமக் குரியவாறு கண்டு பிரதக்ஷிணஞ் செய்வார்கள், இங்கே திருமலையை அறியாதே வலம் வந்தும், அதன் விசேடத்தால் நாவியுங் குதிரையும் காந்திசாலி கலாதரன் என்னும் வித்தியாதரராயின. அறிந்து வலம் வந்து ஒப்பிலா நாயகியாராகிய அம்மையாரும் இடப்பாகம் பெற்றனர்.

இங்கே வருஷந்தோறும் **கார்த்திகை மாதம் கிருத்திகை நக்ஷத்திரத்தில் அண்ணுமலையார் மலைமேல் விளக்காய்** ஜோதிதரிசனங் **காட்டியருளும் அகண்டதீப மஹோத்ஸவம் நிகழும்.** இவ்வகண்டதீப மஹோத்ஸவ தரிசனத்தால் வருஷ முழுவதும் ஜோதிதரிசனஞ் செய்த பலன் கிடைக்குமென்று பிரம்மவிஷ்ணுக்களுக்கு ஆதியில் அண்ணுமலையார் ஆக்ஞை செய்தருளினர்.

தீப தரிசனஞ் செய்தவர் அஞ்ஞான இருள் விலகி ஞானவொளி பெற்று இஷ்ட ஸித்திகளெல்லாம் பெறுவர். ஆகாசவாசிகளாகிய ஸுரர்களும் நரர்களாய் வந்து பக்தர்களோடு நெருங்கி நின்று தீபதரிசனஞ் செய்வார்கள் வேதங்கள் துதித்த அதூம மகா பரஞ்சோதியே நமது **திருவண்ணுமலை அகண்ட தீபமாம்.**

இத்திருவண்ணுமலையின் மகிமை வாக்கு மனங்களைக் கடந்து அனந்தானந்தமாம. ஸகல வேத வேதாந்த ஸித்தாந்தப் பிரதிபாத்திய அதூமக சுத்த கைவல்லிய பரிபூரண ஞானனந்த ஜோதி பர்வதம் நமது திருவண்ணுமலையெனின், இதன் மகிமை சொல்ல வல்லார் அறியவல்லார் யார் தாம் இவ்வுலகத்து?

இத்துணை மகிமையை உட்கொண்டன்றே நமது பரமாசாரிய குலதெய்வமாகிய திருஞானசம்பந்த வள்ளலார், தமது அருந்தமிழ் வேதத்திற் பொருந்தும் மருந்தனைய ஒவ்வொரு திவ்ய மந்திரத்தாலும் அம்மந்திரத் துட்பொருளாகக் கொண்டு நமது **திருவண்ணுமலை** யென்னும் ஞான பர்வத ஜோதிலிங்கத்தை துதி ரூபத்தில் வைத்து உபதேசித்தருளியதென்க

உ
சிவமயம்

திருவண்ணுமலை ஸ்ரீ அருணுசலேச்வரர் தேவஸ்தானம்.
1960–61 சார்வரி வருட உற்சவ விபரங்கள்

சித்திரை மாதம்

	1960 ஏப்ரல்	சார்வரி சித்திரை	கிழமை	உற்சவ விபரம்
	13	1	புதன்	வருடப் பிறப்பு, பால் திருவிழா, ஊஞ்சல் உற்சவம்
	15	3	வெள்ளி	சுக்கிரவார அபிஷேகம், மஞ்சள் நீர் திருவிழா, ஸ்வாமி குமரகோயில் எழுந்தருளல்
	18	6	திங்கள்	சோமவார அபிஷேகம், நடராஜர் அபிஷேகம்
	21	9	வியாழன்	ஸ்ரீ அப்பர் சுவாமிகள் உற்சவம்
	22	10	வெள்ளி	சுக்கிரவாம், பராசக்தி ஊஞ்சல்
	23	11	சனி	பிரதோஷம், பிரதோஷ நாயகர்
	25	13	திங்கள்	சோமவாரம், அமாவாசை,சின்னசந்திரசேகரர்
	27	15	புதன்	கிருத்திகை, ஸ்ரீ சுப்பிரமணியர்.
	29	17	வெள்ளி	சுக்கிரவாரம், சதுர்த்தி, விநாயகர்
	30	18	சனி	வசந்தோற்சவம், முதல் திருவிழா ஸ்ரீ சோமாஸ் கந்தர் (பெரிய நாயகர்)
மே	1	19	ஞாயிறு	2-ந் திருவிழா
	2	20	திங்கள்	3-ந் திருவிழா
	3	21	செவ்வாய்	4-ந் திருவிழா
	4	22	புதன்	5-ந் திருவிழா (ஒளிவு உற்சவம்)
	5	23	வியாழன்	6-ந் திருவிழா
	6	24	வெள்ளி	7-ந் திருவிழா
	7	25	சனி	8-ந் திருவிழா (ஒளிவு உற்சவம்)
	8	26	ஞாயிறு	9-ந் திருவிழா
	9	27	திங்கள்	10-ந் திருவிழா, அய்யங்குளம் தீர்த்தவாரி இரவு: மன்மத தஹனம்
	10	28	செவ்வாய்	பௌர்ணமி, சின்ன சந்திரசேகரர்
	13	31	வெள்ளி	சுக்கிரவாரம், பராசக்தி அம்மன்

வைகாசி மாதம்

1960 மே	சார்வரி வைகாசி	கிழமை	உற்சவ விபரம்
14	1	சனி	மாதப் பிறப்பு, ஸ்ரீ சி. சந்திரசேகரர்.
16	3	திங்கள்	சோமவாரம், பிரதோஷ நாயகர்.
20	7	வெள்ளி	சுக்கிரவாரம், பராசக்தி அம்மன்.
22	9	ஞாயிறு	பிரதோஷம், பிரதோஷ நாயகர்.
23	10	திங்கள்	சோமவாரம், பிரதோஷ நாயகர்.
24	11	செவ்வாய்	கிருத்திகை, ஸ்ரீ சுப்பிரமணியர்.
25	12	புதன்	அமாவாசை, சி. சந்திரசேகரர்.
27	14	வெள்ளி	சுக்கிரவாரம், பராசக்தி அம்மன் ஊஞ்சல்.
29	16	ஞாயிறு	சதுர்த்தி, விநாயகர்.
30	17	திங்கள்	சோமவாரம், பிரதோஷ நாயகர்.
31	18	செவ்வாய்	சஷ்டி, சுப்பிரமணியர்.
ஜூன் 3	21	வெள்ளி	சுக்கிரவாரம், பராசக்தி ஊஞ்சல்.
6	24	திங்கள்	சோமவாரம், பிரதோஷ நாயகர்.
7	25	செவ்வாய்	பிரதோஷம், பிரதோஷ நாயகர், விசாகம்.
9	27	வியாழன்	பௌர்ணமி, சந்திரசேகரர்.
10	28	வெள்ளி	**ஸ்ரீ திருஞானசம்பந்த சுவாமிகள் உற்சவம்.**
13	31	திங்கள்	சோமவாரம், பிரதோஷ நாயகர்.

ஆனி மாதம்

1960 ஜுன்	சார்வரி ஆனி	கிழமை	உற்சவ விபரம்
14	1	செவ்வாய்	மாதப் பிறப்பு, சி. சந்திரசேகரர்.
17	4	வெள்ளி	சுக்கிரவாரம், பராசக்தி ஊஞ்சல்.
20	7	திங்கள்	சோமவாரம், பிரதோஷ நாயகர்.
21	8	செவ்வாய்	கிருத்திகை, சுப்பிரமணியர்.
23	10	வியாழன்	அமாவாசை, சி. சந்திரசேகரர்.
24	11	வெள்ளி	சுக்கிரவாரம், சி. பராசக்தி அம்மன்.
27	14	திங்கள்	சதுர்த்தி, விநாயகர்.
28	15	செவ்வாய்	**ஸ்ரீ மாணிக்கவாசகர் உற்சவம்.**
29	16	புதன்	சஷ்டி, சுப்பிரமணியர்.
30	17	வியாழன்	**அரைக்கட்டு உற்சவம், ஸ்ரீ நடராஜர் ஆயிரக் கால் மண்டபம் எழுந்தருளல்.**
ஜுலை 1	18	வெள்ளி	**ஆனித் திருமஞ்சனம், ஸ்ரீ நடராஜர் தெரிசனம், வீதி உற்சவம்.**
4	21	திங்கள்	சோமவாரம், பிரதோஷ நாயகர்.
6	23	புதன்	பிரதோஷம், பிரதோஷ நாயகர்.
7	24	வியாழன்	**தக்ஷிணாயன பிரம்மோற்சவம், துவஜாரோஹ**ணம், முதல் திருவிழா, சி. சோமாஸ் கந்தர்.
8	25	வெள்ளி	2-வது திருவிழா, சந்திரசேகரர், விநாயகர்.
9	26	சனி	3-வது திருவிழா, ஷை
10	27	ஞாயிறு	4-வது திருவிழா, சந்திரசேகர்.
11	28	திங்கள்	5-வது திருவிழா, சின்ன சோமாஸ்கந்தர்.
12	29	செவ்வாய்	6-வது திருவிழா, சந்திரசேகரர்.
13	30	புதன்	7-வது திருவிழா, சின்ன சோமாஸ்கந்தர்.
14	31	வியாழன்	8-வது திருவிழா, சந்திரசேகரர்.
15	32	வெள்ளி	9-வது திருவிழா, ஷை

ஆடி மாதம்

1961 ஜுலை	சார்வரி ஆடி	கிழமை	உற்சவ விபரம்
16	1	சனி	தக்ஷிணாயண புண்ணியகால தீர்த்தம்; அவரோஹணம்
18	3	திங்கள்	கிருத்திகை, **ஆடிப்பூர உற்சவம்**, அம்பாள் துவஜாரோஹணம், முதல் திருவிழா
19	4	செவ்வாய்	2-வது திருவிழா, ஸ்ரீபராசக்தி அம்மன்
20	5	புதன்	3-வது திருவிழா, ஷை
21	6	வியாழன்	4-வது திருவிழா, ஷை
22	7	வெள்ளி	5-வது திருவிழா, ஷை சுக்கிரவாரம்
23	8	சனி	6-வது திருவிழா, ஷை அமாவாசை
24	9	ஞாயிறு	7-வது திருவிழா, ஷை
25	10	திங்கள்	8-வது திருவிழா, ஷை சோமவாரம்
26	11	செவ்வாய்	9-வது திருவிழா, ஷை
27	12	புதன்	சதுர்த்தி, **ஆடிப்பூரம் தீர்த்தம், தீமிதித்தல்,** அவரோஹணம்
29	14	வெள்ளி	சஷ்டி, சுப்பிரமணியர்
31	16	ஞாயிறு	**ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் உற்சவம்**
ஆகஸ்.1	17	திங்கள்	சோமவாரம், பிரதோஷ நாயகர்
4	20	வியாழன்	பிரதோஷம், பிரதோஷ நாயகர்
5	21	வெள்ளி	சுக்கிரவாரம், **வரலக்ஷ்மி விரதம், அம்பாள் சந்தனலங்கார நிறையணி**
6	22	சனி	பௌர்ணமி, ஸ்ரீ பராசக்தி அம்மன்
12	28	வெள்ளி	சுக்கிரவாரம், சி. பராசக்தி அம்மன்
14	30	ஞாயிறு	கிருத்திகை, **கோகுலாஷ்டமி,** ஸ்ரீ சுப்பிரமணியர் உற்சவம்
15	31	திங்கள்	**ஸ்ரீ அருணகிரிநாதர் நினைவு நாள்,** திருப்புகழ் பஜனை, சுதந்திர தினம் இரவு: ஸ்ரீ அருணகிரிநாதர் வெள்ளி இந்திர விமான திருவீதி உலாக்காட்சி

ஆவணி மாதம்

1960 ஆகஸ்ட்	சார்வரி ஆவணி	கிழமை	உற்சவ விபரம்
16	1	செவ்வாய்	மாதப் பிறப்பு, சந்திரசேகரர்
19	4	வெள்ளி	பிரதோஷம், பிரதோஷ நாயகர்
21	6	ஞாயிறு	அமாவாசை, சி. சந்திரசேகரர்
22	7	திங்கள்	சோமவாரம், பிரதோஷ நாயகர்
26	11	வெள்ளி	விநாயக சதுர்த்தி, ஸ்ரீ விநாயகர்
27	12	சனி	சஷ்டி, ஸ்ரீ சுப்பிரமணியர்
29	14	திங்கள்	சோமவாரம், பிரதோஷ நாயகர்
31	16	புதன்	ஆவணி மூலம், ஸ்ரீ சந்திரசேகரர்
செப். 2	18	வெள்ளி	சுக்கிரவாரம். பராசக்தி ஊஞ்சல்
3	19	சனி	பிரதோஷம், பிரதோஷ நாயகர்
4	20	ஞாயிறு	சதுர்த்தசி, ஸ்ரீ நடராஜர் அபிஷேகம் பௌர்ணமி
5	21	திங்கள்	சோமவாரம், பிரதோஷ நாயகர்
9	25	வெள்ளி	சுக்கிரவாரம், பராசக்தி ஊஞ்சல்
11	27	ஞாயிறு	கிருத்திகை, ஸ்ரீ சுப்பிரமணியர்
12	28	திங்கள்	சோமவாரம், பிரதோஷ நாயகர்

புரட்டாசி மாதம்

1960 செப்டம்பர்	சார்வரி புரட்டாசி	கிழமை	உற்சவ விபரம்
16	1	வெள்ளி	மாதப் பிறப்பு
18	3	ஞாயிறு	பிரதோஷம், பிரதோஷ நாயகர்
19	4	திங்கள்	சோமவாரம்
20	5	செவ்வாய்	அமாவாசை
21	6	புதன்	நவராத்திரி விழா ஆரம்பம், முதல் திருவிழா, ஸ்ரீ அருணகிரிநாதர் ஜனன உற்சவம்
22	7	வியாழன்	2-வது திருவிழா, ஸ்ரீ பராசக்தி அம்மன்
23	8	வெள்ளி	3-வது திருவிழா
24	9	சனி	4-வது திருவிழா
25	10	ஞாயிறு	5-வது திருவிழா
26	11	திங்கள்	6-வது திருவிழா
27	12	செவ்வாய்	7-வது திருவிழா
28	13	புதன்	8-வது திருவிழா, சரஸ்வதி பூஜை, சந்தனலங்காரம், அம்பாளுக்கு நிறையணி
29	14	வியாழன்	9-வது திருவிழா, விஜயதசமி, ஸ்ரீ சுப்பிரமணியர் அம்பு போடும் உற்சவம்
30	15	வெள்ளி	சுக்கிரவாரம்
அக். 2	17	ஞாயிறு	பிரதோஷம், பிரதோஷ நாயகர்
3	18	திங்கள்	ஸ்ரீ நடராஜர் அபிஷேகம்
4	19	செவ்வாய்	பௌர்ணமி சி. சந்திரசேகரர்
7	22	வெள்ளி	சுக்கிரவாரம்
8	23	சனி	கிருத்திகை, ஸ்ரீ சுப்பிரமணியர்
10	25	திங்கள்	சோமவாரம்
14	29	வெள்ளி	சுக்கிரவாரம்

ஐப்பசி மாதம்

1960 அக்டோபர்	சார்வரி ஐப்பசி	கிழமை	உற்சவ விபரம்
17	1	திங்கள்	பிரதோஷம், மாதப் பிறப்பு, சி, சந்திரசேகரர்.
18	2	செவ்வாய்	தீபாவளி, நரகசதுர்த்தசி ஸ்நானம்.
19	3	புதன்	தீபாவளிப் பண்டிகை, அமாவாசை.
20	4	வியாழன்	கந்தர் சஷ்டி, முதல் திருவிழா.
21	5	வெள்ளி	ஷை 2-ந் திருவிழா.
22	6	சனி	ஷை 3-ந் திருவிழா.
23	7	ஞாயிறு	ஷை 4-ந் திருவிழா.
24	8	திங்கள்	ஷை 5-ந் திருவிழா.
25	9	செவ்வாய்	ஷை 6-ந் திருவிழா, சூர சம்ஹாரம் ஸ்ரீ சண்முக சுவாமி புறப்பாடு.
26	10	புதன்	ஸ்ரீ சுப்பிரமணியர் திருக்கல்யாணம்.
28	12	வெள்ளி	சுக்கிரவாரம், பராசக்தி ஊஞ்சல்.
31	15	திங்கள்	சோமவாரம், பிரதோஷ நாயகர்.
நவம் 1	16	செவ்வாய்	பிரதோஷம், ஷை
2	17	புதன்	அன்னுபிஷேகம், சந்திரசேகரர்.
4	19	வெள்ளி	சுக்கிரவாரம், கிருத்திகை, ஸ்ரீ சுப்பிரமணியர்.
7	22	திங்கள்	சோமவாரம், பிரதோஷ நாயகர்.
11	26	வெள்ளி	சுக்கிரவாரம், ஸ்ரீ பராசக்தி ஊஞ்சல்.
14	29	திங்கள்	சோமவாரம், பிரதோஷ நாயகர்.

கார்த்திகை மாதம்

1960 நவம்பர்	கார்வரி கார்த்திகை	கிழமை	உற்சவ விபரம்
16	1	புதன்	பிரதோஷம், மாதப் பிறப்பு.
18	3	வெள்ளி	அமாவாசை.
20	5	ஞாயிறு	ஸ்ரீ துர்க்காம்பாள் உற்சவம்.
21	6	திங்கள்	ஸ்ரீ பிடாரி உற்சவம்.
22	7	செவ்வாய்	ஸ்ரீ விநாயகர் உற்சவம்.
23	8	புதன்	கார்த்கை தீப பிரம்மோற்சவம் ஆரம்பம், துவஜாரோஹணம், முதல் திருவிழா, மாலை. அதிகார நந்தி
24	9	வியாழன்	2-ம் திருவிழா, காலை சந்திரசேகரர், சூர்ய பிரபை, மாலை வெள்ளி இந்திரவிமானம்,பஞ்ச மூர்த்திகள்.
25	10	வெள்ளி	3-ம் திருவிழா, பூதவாஹனம், சந்திரசேகரர். மாலை சிம்ம வாஹனம், பஞ்ச மூர்த்திகள்,
26	11	சனி	4-ம் திருவிழா. நாகவாஹனம், ஷை, மாலை வெள்ளி கற்பக விருக்ஷம் காமதேனு, பஞ்ச மூர்த்திகள்.
27	12	ஞாயிறு	5-ம் திருவிழா, ரிஷப வாஹனம், ஷை, மாலை வெள்ளி பெரிய ரிஷபவாஹனக் காக்ஷி, பஞ்ச மூர்த்திகள்.
28	13	திங்கள்	6-ம் திருவிழா, வெள்ளி யானைவாஹனம். மாலை வெள்ளிரதக்காக்ஷி, பஞ்சமூர்த்திகள்,
29	14	செவ்வாய்	7-ம் திருவிழா, மஹாரதங்கள்.
30	15	புதன்	8-ம் திருவிழா, குதிரை வாஹனம், சந்திர சேகரர், மாலை 4-மணிக்கு பிக்ஷாடனர், இரவு குதிரை வாஹனம், பஞ்ச மூர்த்திகள்.
டிசம் 1	16	வியாழன்	9-ம் திருவிழா, வெள்ளி விமானம், ஷை, மாலை இராவணேசுவர வாஹனம்
2	17	வெள்ளி	10-ம் திருவிழா, காலை 4-மணிக்கு பரணி தீபம், மாலை 5-30 மணிக்கு ஜோதிஸ்வரூப மஹா தீப தெரிசனம், ஸ்ரீ அர்த்தநாரீஸ்வரர் தெரிசனம், தேவி இடப்பாகம் பெற்ற ஐதிகம்,
3	18	சனி	தெப்பம், கிரிப்பிரதக்ஷிணம்.
4	19	ஞாயிறு	தெப்பம்.
5	20	திங்கள்	தெப்பம்.
6	21	செவ்வாய்	ஸ்ரீ சண்டேசுவரர் உற்சவம்.
9	24	வெள்ளி	சுக்கிரவாரம்.
12	27	திங்கள்	ஸ்ரீ அண்ணாமலையாருக்கு 1008 சங்காபிஷேகம்.

மார்கழி மாதம்

1960 டிசம்பர்	சார்வரி மார்கழி	கிழமை	உற்சவ விபரம்
15	1	வியாழன்	மாதப் பிறப்பு
16	2	வெள்ளி	பிரதோஷம்
17	3	சனி	அமாவாசை
19	5	திங்கள்	சோமவாரம்
21	7	புதன்	சதுர்த்தி
24	10	சனி	ஸ்ரீ மாணிக்கவாசக ஸ்வாமிகள் உற்சவம், முதல் திருவிழா
25	11	ஞாயிறு	2-ம் திருவிழா
26	12	திங்கள்	3-ம் திருவிழா, சோமவாரம்
27	13	செவ்வாய்	4-ம் திருவிழா
28	14	புதன்	5-ம் திருவிழா, வைகுண்ட ஏகாதசி, ஸ்ரீவேணு கோபாலஸ்வாமி அபிஷேகம் ஆராதனை
29	15	வியாழன்	6-ம் திருவிழா, கிருத்திகை
30	16	வெள்ளி	7-ம் திருவிழா, பிரதோஷம்
31	17	சனி	8-ம் திருவிழா
1961			
ஜன. 1	18	ஞாயிறு	9-ம் திருவிழா, அரைக்கட்டு உற்சவம், ஸ்ரீநடராஜர் ஆயிரக்கால் மண்டபம் எழுந்தருளல்
2	19	திங்கள்	ஆருத்ரா தரிசனம், ஸ்ரீ நடராஜர் உற்சவம்
5	22	வியாழன்	உத்தராயண பிரம்மோற்சவம், முதல் திருவிழா, துவஜாரோஹணம்.
6	23	வெள்ளி	2-வது திருவிழா.
7	24	சனி	3-வது திருவிழா.
8	25	ஞாயிறு	4-வது திருவிழா.
9	26	திங்கள்	5-வது திருவிழா.
10	27	செவ்வாய்	6-வது திருவிழா.
11	28	புதன்	7-வது திருவிழா.
12	29	வியாழன்	8-வது திருவிழா.
13	30	வெள்ளி	9-வது திருவிழா.

தை மாதம்

1961 ஜனவரி	சார்வரி தை	கிழமை	உற்சவ விபரம்
14	1	சனி	10-வது திருவிழா, உத்தராயண புண்ணிய காலம், தீர்த்தம், அவரோஹணம்
15	2	ஞாயிறு	திருவூடல் உற்சவம்.
16	3	திங்கள்	கிரிப்பிரதக்ஷிணம், அமாவாசை
18	5	புதன்	தக்ஷிணபினுகினி தீர்த்தம் (மணலூர்ப் பேட்டையில்.)
20	7	வெள்ளி	சதுர்த்தி.
21	8	சனி	சஷ்டி.
23	10	திங்கள்	ரத சப்தமி, கலச பாக்கம், செய்யாறு தீர்த்தம்
25	12	புதன்	கிருத்திகை, சுப்பிரமணியர்.
27	14	வெள்ளி	சுக்கிரவாரம்.
29	16	ஞாயிறு	பிரதோஷம்.
30	17	திங்கள்	சோமவாரம்.
31	18	செவ்வாய்	தைப்பூசம், ஈசான்ய தீர்த்தம்.
பிப்ர 3	21	வெள்ளி	சுக்கிரவாரம்.
6	24	திங்கள்	சோமவாரம்.
10	28	வெள்ளி	சுக்கிரவாரம்.

மாசி மாதம்

1961 பிப்ரவரி	சார்வரி மாசி	கிழமை	உற்சவ விபரம்
12	1	ஞாயிறு	மாதப் பிறப்பு, சந்திரசேகரர்.
13	2	திங்கள்	**மஹா சிவராத்திரி, இலிங்கோற்பவ நாள்.**
14	3	செவ்வாய்	அமாவாசை, சி. சந்திரசேகரர்.
17	6	வெள்ளி	சுக்கிரவாரம், சி. பராசக்தி.
18	7	சனி	சதுர்த்தி, விநாயகர்.
20	9	திங்கள்	சஷ்டி, சுப்பிரமணியர்.
21	10	செவ்வாய்	கிருத்திகை, சுப்பிரமணியர்.
24	13	வெள்ளி	சுக்கிரவாரம், சி. பராசக்தி.
27	16	திங்கள்	சோமவாரம், பிரதோஷம், பிரதோஷ நாயகர்.
28	17	செவ்வாய்	**ஸ்ரீ நடராஜர் அபிஷேகம்.**
மார்ச் 1	18	புதன்	**மாசி மகம்,** பள்ளிகொண்டாபட்டு **தீர்த்தம்.**
2	19	வியாழன்	பௌர்ணமி, மகுடாபிஷேகம்.
3	20	வெள்ளி	சுக்கிரவாரம், சி. பராசக்தி.
6	23	திங்கள்	சோமவாரம், பிரதோஷ நாயகர்.
10	27	வெள்ளி	சுக்கிரவாரம், சி. பராசக்தி
13	30	திங்கள்	சோமவாரம், பிரதோஷ நாயகர்.

பங்குனி மாதம்

1961 மார்ச்	சார்வரி பங்குனி	கிழமை	உற்சவ விபரம்
14	1	செவ்வாய்	மாதப்பிறப்பு, பிரதோஷம், சந்திரசேகரர்.
16	3	வியாழன்	அமாவாசை, சி. சந்திரசேகரர்.
17	4	வெள்ளி	சுக்கிரவாரம், ஸ்ரீ பராசக்தி, யுகாதிப் பண்டிகை.
20	7	திங்கள்	சதுர்த்தி, விநாயகர்.
21	8	செவ்வாய்	கிருத்திகை, சுப்பிரமணியர்.
22	9	புதன்	சஷ்டி, சுப்பிரமணியர்.
24	11	வெள்ளி	சுக்கிரவாரம், சி. பராசக்தி.
25	12	சனி	**ஸ்ரீ ராமநவமி.**
27	14	திங்கள்	சோமவாரம், பிரதோஷ நாயகர்.
29	16	புதன்	பிரதோஷம், பிரதோஷ நாயகர்.
31	18	வெள்ளி	**பங்குனி உத்திரம், திருக்கல்யாண உற்சவம்.**
ஏப்ரல் 1	19	சனி	சுவாமி கீழ்நாத்தூர் எழுந்தருளல்.
2	20	ஞாயிறு	நலங்கு, ஊஞ்சல்.
3	21	திங்கள்	நலங்கு, ஊஞ்சல்.
4	22	செவ்வாய்	நலங்கு, ஊஞ்சல்.
5	23	புதன்	மஞ்சள் நீர், சுவாமி தாமரைக்குளம், குமர கோவில் எழுந்தருளல்.
7	25	வெள்ளி	சுக்கிரவாரம், சி. பராசக்தி.
10	28	திங்கள்	சோமவாரம், பிரதோஷ நாயகர்.
12	30	புதன்	பிரதோஷம், பிரதோஷ நாயகர்.

உ சிவமயம்

விசேடக் குறிப்பு

நவராத்திரி விழா :

"புரட்டாசி மாதம் சுக்ல பட்ச பிரதமை உடைய ராத்திரியில் ஆரம்பித்து, நவமி உடைய ராத்திரியில் மஹா நவமி விழாவும், சாயங்கால வேளேயில் தசமி உள்ள தினத்தில் மாலேயில் விஜயதசமி விழாவும் செய்ய வேண்டும்" என்று காமிகாகமம், காரணுகமம் ஆகியவற்றில் விதிக்கப்பெற்றிருப்பதை அனுசரித்தும் பல வருடங்கள் இந்தச் சம்பிரதாயப்படியே நடந்து வந்துள்ள வழக்கத்தை அனுசரித்தும் நிகழும் சார்வரி வருடம் புரட்டாசி மாதம் 6-ந் தேதி புதன்கிழமை நவராத்திரி உற்சவம் ஆரம்பித்து, 13-ந் தேதி புதன் கிழமை மஹா நவமி பூஜையும் 14-ந் தேதி வியாழக் கிழமை விஜயதசமி விழாவும் நடைபெறும்.

திருக் கார்த்திகை தீப தெரிசனம்

சார்வரி வருடம் கார்த்திகை மாதம் 16-ந் தேதி (1—12—1960) பரணி 29.46 இருக்கிறது. அகஸ் 28.32 அமைந்திருக்கிறது. அன்று தினம் அஸ்தமன காலத்தில் பரணி இருந்துங் கூட சில பஞ்சாங்கங்களில் அன்று அண்ணுமலேயார் தீபம் குறிக்கப் பெற்றுள்ளது. ஸ்ரீ அண்ணுமலேயார் தீப தரிசனத்துக்கு முக்கியமாக அஸ்தமன காலத்தில் கிருத்திகை இருக்க வேண்டும். அதுவும் பௌர்ணமி திதியை அனுசரித்ததாயிருப்பது விசேஷம்.

நிகழும் சார்வரி வருடம் கார்த்திகை மாதம் 17-ந் தேதி (2—12—60) வெள்ளிக்கிழமை, கிருத்திகை 33.02 இருப்பதாலும் அன்று தினம் பௌர்ணமியுடன் சேர்ந்து உதய வியாபிநியாய் அஸ்தமன காலத்திற்குப் பிறகும் கிருத்திகை இருப்பதாலும், பகல் தீர்த்தவாரி காலத்திலும் கிருத்திகை இருப்பதாலும், அன்று தினமே ஸ்ரீ அண்ணுமலேயார் ஜோதி ஸ்வரூப தரிசனம் நடைபெறும்.

பட்டம். P. V. K. ராமலிங்கசிவாசாரியார்.

சைவாகமபரீக்ஷாதிகாரி.

சென்னே இந்து அறநிலேய பாதுகாப்பு இலாகா

16—5—60.

சௌத் இந்தியா பிரஸ், காரைக்குடி-1.